**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 165 /2021**

**Deposition of P.W.** 5

Name : மணியன்

S/o, D/o, W/o : செல்லநாடார்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 23.04.2025

Accused Present

**முதல் விசாரணை**–

நான் சுருளோட்டில் வசித்து வருகிறேன். நான் பால்வெட்டும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். அ.சா.2யும் தெரியும். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். 2021ம் வருடம் 19ம் தேதி இரவு 10.00 மணிக்கு பொன்மனை சந்திப்பில் வைத்து சுரேஷ் – செந்திலை வெட்டுக்கத்தியால் தலையில் 3 இடங்களில் வெட்டினார். கீழே விழுந்த செந்திலை நான் துாக்கினேன். குலசேகரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மகாராஷ்டிராவில் பால்வெட்டும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.2 சொன்னதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். காலையிலிருந்து செந்தில் என்னுடன் தான் இருந்தார். தற்போது அ.சா.2 செந்தில் நீதிமன்றத்திற்கு வெளியே இருக்கிறார். சாட்சி சொல்ல

வேண்டுமென்று என்னை வற்புறுத்தியதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், செந்திலும் பொன்மனை சந்திப்பிற்கு இருசக்ர வாகனத்தில் வந்தோம். வலியாற்றுமுகம் சாலையிலிருந்து – பொன்மனை சந்திப்பிற்கு வந்தோம். நான் சுருளோடு செல்ல வேண்டும். நான் சுருளோடு சாலையில் 50 அடி தூரம் சென்ற பிறகு சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. பொன்மனை சந்திப்பிலிருந்து சுருளோடு பிரிவிற்கு திரும்பும் போது சம்பவம் நடந்தது. சாலையின் கிழக்கு பக்கம் சம்பவம் நடந்தது. இருவருக்கும் இடையே 2 நிமிடம் கைகலப்பு நடந்தது. செந்தில் இருசக்கர வாகனத்தில் இருந்தார். கைகலப்பில் இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்து விட்டார் என்றால் சரிதான். சம்பவ சமயம் கொரோனா ஊரடங்கு என்றால் சரிதான். செந்திலை நான் தான் தூக்கி ஆம்புலன்சில் அனுப்பி வைத்தேன். செந்திலின் உடம்பில் இருந்து வந்த ரத்தம் எனது துணியிலும் பட்டது. போலீசார் என்னிடம் ரத்தம் பட்ட துணியை வாங்கவில்லை. ஆம்புலன்சில் ஏற்றி விட்டு நான் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. போலீசார் அவர்களாகவே சம்பவ இடத்திற்கு வந்தார்கள். சம்பவம் நடந்து 10 நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள். போலீசாருடன் நான் அ.சா.2ன் வீட்டையும், எதிரியின் வீட்டையும் காட்டுவதற்காக போனேன். இரவு 11.00 மணிக்கு போலீசாருடன் இருவரின் வீட்டையும் காட்டி கொடுத்தேன். போலீசாருடன் எதிரி எத்தனை முறை வெட்டினார் என்று சொன்னேன். சம்பவ இடத்தில் வைத்து அ.சா.2ஐ பார்த்து போலீசார் எத்தனை வெட்டுகள் என்று தெரிந்துக்கொண்டார்கள். போலீசாரிடம் அ.சா.2 சம்பவம் பற்றி சொன்னார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. செந்தில் போலீசாரிடம் சம்பவம் பற்றி சம்பவ இடத்தில் வைத்து சொன்னார் என்றால்

சரிதான். சாட்சி ராமையனும், என்னுடனும், செந்தில் உடனும் காலையிலிருந்து இருந்தார் என்றால் சரிதான். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. செந்தில் சொன்னதன் அடிப்படையில் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் செந்திலுக்காக பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 165/2021**

**Deposition of P.W.**6

Name : ராமையன்

S/o, D/o, W/o : பெருமாள்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: **23**.04.2025

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் சுருளோடு சாஸ்தான் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். கூலிவேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பங்களை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். நான் புகார் கொடுப்பதற்காக குலசேகரம் காவல்நிலையத்திற்கு 28.07.2021ம் தேதி மாலை 06.00 மணிக்கு குலசேகரம் காவல்நிலையம் சென்றிருந்தேன். எதிரியின் வீட்டிலிருந்து வெட்டருவாள் மற்றும இருசக்கர வாகனத்தை கைப்பற்றி வந்ததற்காக கையெழுத்து போட சொன்னார்கள் கையெழுத்து போட்டு கொடுத்தேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எனது திருமண தேதி தெரியாது. நீதிமன்றத்தில் சொன்ன

தேதியை போலீசார் சொல்லி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. காலையிலிருந்து நான் செந்திலோடு தான் இருக்கிறேன். போலீசார் காலையில் பேப்பர் கொடுத்து படிக்க சொன்னார்கள் என்றால் இல்லை. நான் சொன்ன தேதியில் நானும், செந்திலும் மைத்துனரும் சம்பவம் தொடர்பாக கொடுத்த புகார் பற்றி விசாரிக்க போய் இருந்தோம். செந்திலின் மைத்துனர் மணி அழைத்ததின் பேரில் போனேன். மணி கேட்டுக்கொண்டதற்காக கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. பொருட்களை கொண்டு வந்ததற்காக கையொப்பம் கேட்டார்கள் போட்டு கொடுத்தேன். நா'ன கையொப்பம் செய்த பேப்பர்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. செந்தில் எனக்கு உறவினர் இல்லை, பழக்கம். நான் சொன்ன நாளில் , சொன்ன நேரத்தில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.